பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

14 09 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவின் அறிவுசார் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்களிப்பு அவசியம் என்று மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
- ஆசிரியர் தகுதித் தேர்வு தொடர்பான விவகாரத்தில் சட்ட வல்லுனர்களிடம் ஆலோசனை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.
- திமுக ஆட்சியில் விலைவாசி அதிகரித்துள்ளதாகவும், சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.
- உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

**<<<<>>>>**

இந்தியாவின் அறிவுசார் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வளைதளத்தில் அவர் வெளியிடடுள்ள பதிவில், நாட்டின் அறிவுசார் பாரம்பரியம், அறிவியல் மற்றும் ஆராய்ச்சிகள் தொடர்பான ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், தாமிரப் பட்டயங்கள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்து ஆவணப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கென 483 கோடி ரூபாய் செலவில் செலவிடப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் அறிவுசார் பாரம்பரியத்தை உலக அளவில் கொண்டு செல்லும் வகையில் ஞானபாரத இயக்கம் என்ற சர்வதேச மாநாடு நடத்தப்பட்டு வருவதாக திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்களிப்பு அவசியம் என்று மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இளம் தலைவர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட உதவிடும் என்று தெரிவித்தார்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் இளைஞர்களை ஒருங்கிணைக்க முடியும் என்று அவர் கூறினார்.

சுயசார்பு இந்தியா இயக்கத்தின் இலக்குகளை எட்டுவதற்கான நடவடிக்கைகளில் இளைஞர்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<>>>>

மணிப்பூர் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள வளர்ச்சித் திட்டங்கள் அம்மாநில மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின் கீழ் மணிப்பூர் மாநிலம் வளர்ச்சிக்கான புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், அம்மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகள், மக்களின் வாழ்வாதாரம் மற்றும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்க உதவிடும் என்று டாக்டர் முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆசிரியர் தகுதித் தேர்வு தொடர்பான விவகாரத்தில் சட்ட வல்லுனர்களிடம் ஆலோசனை பெற்று விரைவில் நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்படாத வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

அனைத்து தரப்பினரும் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி பட்டியலிட்டார்.

<<<<>>>>

அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை களைவதற்கான நடவடிக்கையை மாநில அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி தேசிய மகளிர் அணி தலைவர் திருமதி வானதி சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆசிரியர் தகுதி தேர்வு வாரியத்தில் உள்ள பிரச்சனைககளுக்கு நீதிமன்றம் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றத் தவறிவிட்டதாக அவர் குறை கூறினார்.

அரசுப் பள்ளிகளில் கழிப்பிட வசதிகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் திருமதி வானிதி சீனிவாசன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

திமுக ஆட்சியில் விலைவாசி அதிகரித்துள்ளதாகவும், சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

கோவையில் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், அஇஅதிமுக ஆட்சி அமைந்தால் தொழில் வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் என்று கூறினார்.

மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்புப் பணிகளை காலதாமதமின்றி குறித்த நேரத்தில் முடிப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் நலத்திட்டங்கள் குறித்து திரு. எடப்பாடி பழனிசாமி பட்டியலிட்டார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களுக்கு பல்வேறு தரப்பு மக்களும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

ஆயுள் மற்றும் மருத்துவ காப்பீடுகளுக்கான ஜி.எஸ்.டி. குறைக்கப்பட்டுள்ளது மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதாக ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த காப்பீட்டு முகவர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

மீன் வளத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக பிரதமரின் மீன்வள மேம்பாடடுத் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் உள்நாட்டு மீன் இனங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகள் உத்வேகம் பெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் அடுத்த 5 தினங்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, கடலூர், செங்கல்பட்டு உள்ளிட்ட 15 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் கொள்முதல் செய்வதை நேட்டோ நாடுகள் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் போர்நிறுத்த முயற்சிகளுக்கு ஹமாஸ் அமைப்பு தடை ஏற்படுத்தி வருவதாக இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெதன்யாகு குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<>>>>

நேபாளத்தில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தேர்தலை சுமுகமாக நடத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் திரு. Ramachandra Paudel கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

போதைப்பொருள் இல்லாத நாடாக இந்தியாவை உருவாக்குவதற்கான நெறிமுறைகளை வகுப்பது குறித்து புதுதில்லியில் நடைபெறவுள்ள போதைப்பொருள் தடுப்புப் பணிக்குழுவின் தேசிய மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

<<<<>>>>

போலியான பதிவு எண்ணைப் பயன்படுத்தி மாநில அரசுக்கு வரி இழப்பு ஏற்படும் வகையில் வேலூரில் இயக்கப்பட்டு வந்த ஆம்னி பேருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

திருப்பூரில் உரிய ஆவணங்களின்றி தங்கியிருந்த பெண் உட்பட வங்கதேசத்தைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

தென்காசி மாவட்டத்தில் நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களுக்கான பாராட்டு விழா ஆட்சியர் திரு. கமல் கிஷோர் தலைமையில் நடத்தப்பட்டது.

<<<<>>>>

ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 16 ஆயிரம் கன அடியாக உள்ளது.

<<<<>>>>

ராணிப்பேட்டை சி.எம்.சி மருத்துவமனையில் மூளைச்சாவு அடைந்த ஒருவரது உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டன.

<<<<>>>>

காஞ்சிபுரத்தில் மாநில அரசின் சார்பில் நடத்தப்படும் மருத்துவ முகாமை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

<<<<>>>>

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

இங்கிலாந்தின் Liverpool-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர் 57 கிலோ எடைப் பிரிவில் Jasmine தங்கப் பதக்கம் வென்றார்.

மகளிர் 80 கிலோ எடைப் பிரிவில் Nupur வெள்ளிப் பதக்கத்தையும், Pooja Rani வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

<<<<>>>>

ஆசிய கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

**<<<<>>>>**